தூதுவர் தேசாய் நாடு திரும்புவார்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" : A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | சென்னை: புரட்டாசி 1உ வெள்ளி (17—9—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: புரட்டாசி 2உ சனி (18—9—54) | இதழ்: 82

கோத்தலாவலை அறிவிப்பு

அமெரிக்கா செல்லுமுன் அடுத்தவர் பதவி ஏற்பார்!

கூடிப்பேச பிரதமருக்கு மந்திரிசபை கட்டளை!

ஆனால் கொள்கையில் ஏதும் மாற்றம் இருக்காதாம்!

கொழும்பு, செப். 16—

இலங்கையில் இந்தியத் தூதுவரான தேசாய் சீக்கிரமே நாடு திரும்புவார் என்றும், இலங்கைப் பிரதமர் அமெரிக்க சுற்றுப் பயணத்திற்குச் செல்லுவதற்கு முன்பாக தேசாய்க்குப் பின்னர் வரும் தூதுவர் தனது பதவியை ஏற்றுக்கொண்டுவிடுவார் என்றும் தெரிகிறது.

இலங்கை மந்திரிசபைக் கூட்டத்தில் பிரதமர் கோத்தலாவலை இச்செய்தியைத் தெரிவித்தார் என்று தெரிகிறது.

செவ்வாயன்று இந்திய—இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக நடைபெற்ற மாநாட்டின் நடவடிக்கைகளை கோத்தலாவலை, மந்திரிசபைக் கூட்டத்தில் எடுத்துக் கூறினார் என்று தெரிகிறது. நாடற்றவர்களாக்கப்படும் இந்தியக் குடிமக்கள் பிரச்சினையில் நல்ல முடிவு ஏற்படாமல் போனமைக்கான காரணங்களை கோத்தலாவலை கூறினார் என்று தெரிகிறது.

நாடற்றவர்களாக்கப்படும் இந்தியர்களை இந்தியப் பிரஜைகளாகாது தடை செய்யும் இந்தியத் தூதுவராலயத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக பதில் நடவடிக்கைகள் ஏதும் எடுக்க வேண்டாமென்று கோத்தலாவலைக்கு மந்திரிசபை எடுத்துக் கூறியதுடன், இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின் அமுலில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதில் இந்தியப் பிரதமர் பண்டித நேருவுடன் கோத்தலாவலை பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டும் என்றும் இலங்கை மந்திரி சபை கோத்தலாவலையைக் கேட்டுக்கொண்டது.

இந்த நிலையில் ஒப்பந்தம் முறிந்து போயிற்று என்று

(4-ம் பக்கம் பார்க்க)

நாகர்ஹவேலி மீது வெள்ளையர் 'படையெடுப்பு' முஸ்தீபு!

லிஸ்பன் யுத்தமந்திரியே நேரில்கலந்துகொள்ளலாம்

பம்பாய், செப். 16—

விடுதலை பெற்ற டாத்ரா, நாகர் ஹவேலி இடப் பகுதிகளை மீண்டும் கைப்பற்ற, போர்ச்சுகல்லிலிருந்து வந்த வெள்ளையர்கள் படையெடுக்கப் போவதாகத் தகவல் கிடைத்துள்ளது.

படையெடுப்பு ஏற்பாடுகளை போர்ச்சுகீசிய பாதுகாப்பு மந்திரியே நேரில் நடத்துவார் என்றும் செய்தி வந்துள்ளது.

'நிசாஸ்' என்னும் போர்க்கப்பல் மூலம் கோவா கரையைச் சுற்றிலும் கடல் கண்ணிகளை விதைக்க ஏற்பாடு செய்வதாகவும், அந்தக் கப்பலில், பிரேசில், ஸ்பானிஷ் துருப்புகளும் வருமென்றும் தகவல் கிடைத்துள்ளது.

வியட்நாமுக்கு பூரண விடுதலை!

பிரான்ஸ் விட்டுக் கொடுக்கிறது

சைகோன், செப். 16—

இந்தோ-சீனாவிலேயே பெரிய ராஜ்யமாகக் கருதப்படும் தெற்கு வியட்நாமுக்குப் பூரண விடுதலை கிடைத்துவிட்டதாகத் தெரிகிறது.

எஞ்சியுள்ள சிவில் அதிகாரங்கள் அனைத்தையும், பிரெஞ்சு நாட்டு இராணுவத் தலைவர் ஜெனரல் பால் எலியிடமிருந்து, வியட்நாம் பிரதமர் டியேம்-டின்-டிபம் ஏற்றுக்கொண்டார் என்று தெரியவருகிறது.

நெல்லை மாநாடுகள்

செப். 18, 19—சனி, ஞாயிறு இருநாட்களிலும் திருநெல்வேலியில் நடைபெறும் நெல்லை மாவட்ட தி. மு. கழக இரண்டாவது மாநாடுகளில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை கலந்து கொள்கிறார்.

நெல்லை மாநாடுகளில் பொதுச் செயலாளர் கலந்து கொள்வதினால் சென்னை செம்பியத்திலும், இராயபுரத்திலும், 18, 19-ந் தேதிகளில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை கலந்துகொள்ள இருந்த கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

கோவா அறப்போர்

13 தொண்டர்கள் கைது

பெல்காம், செப். 10—

கோவாவில் உள்ள தெரகோல் கோட்டை மீது இந்தியக் கொடியை ஏற்ற போர்ச்சுகீசிய பகுதிகளில் நுழைந்த தொண்டர்களை போர்ச்சுகீசியத் துருப்புகள் தடுத்து, கோட்டைஅருகே செல்லு முன்பு அவர்களைக் கைது செய்தனர் என்று கோவா தேசிய காங்கிரசின் தலைவரான பீட்டர் அல்வாரஸ் கூறியிருக்கிறார்.

தொண்டர்கள் அணிந்திருந்த கதர்குல்லாய்கள் பலாத்காரமாக அகற்றப்பட்டன என்றும், அவர்களிடமிருந்த இந்தியக் கொடிகள் அபகரிக்கப்பட்டன என்றும் தெரிகிறது.

இத்தொண்டர்கள் எல்லாம் ஏ பி. கோயல்கே தலைமையில் 'சலோ தெரகோல்' என்று கோஷமிட்டுச் சென்றனர் என்று தெரிகிறது.

கைது செய்யப்பட்ட தொண்டர்கள் 13 பேர் என்று தெரிகிறது.

* * *

ஏராளமான இராணுவச் செலவு காரணமாக கோவா சர்க்காரின் நிதி நிலைமையில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறதாம்.

சீன அரசியல் நகல் சட்டம்

அங்கீகரிக்கப்பட்டது!

ஹாங்காங், செப். 16—

சீனாவில், முதன் முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பார்லிமெண்டு, நகல் அரசியல் சட்டத்தை நிறைவேற்றியிருப்பதாக பீகிங் வானொலிச் செய்தியில் அறிவிக்கப்படுகிறது.

****

நெல்லை வாரீர்!

★

இழந்த நமது இனத்தவர் வாழ்வை மீட்கவும், வடவரின் ஆதிக்கத்தின் பிடியிலிருந்து நமது நாட்டை விடுவிக்க நாம் கூறும் வழிமுறைகள்—இன்றைய நமது பிரச்சினைகள் ஆகியவைகளை விளக்க நெல்லையில் இரு மாநாடுகள் 18, 19—9—54-ல் நடைபெறுகின்றன.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் விடுதலைப் போரிலே சதி வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டு காங்கிரஸ் ஆட்சியின் கொடுமைக்கு ஆளான தோழர்கள், நெல்லையில் நடத்தும் மாநாடுகள் சிறந்த முறையில் நடைபெறப் போகின்றன.

தூத்துக்குடி சதி வழக்கிலே நூற்றுக்கு மேற்பட்ட தோழர்கள் குற்றம் சுமத்தப்பட்டனர். அவர்கள் வாழ்வையே பாழாக்கவும், அவர்களது குடும்பங்கள் வறுமையில் வாடவும் காங்கிரஸ் அரசாங்கம் தனது அடக்குமுறையை ஏவியது. வேதனையால் வாடினாலும், வாழ்நாள் எல்லாம் சிறைக்கூடத்திலேயே கழிப்பது என்றாலும், தங்களது ஜீவிய லட்சியத்திலிருந்து பிறழாது கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, அமைதி—ஆகிய நற்பண்புகளைக் கேடயமாகக் கொண்டு நாட்டு விடுதலைக்கு உழைக்கும் வீரர்கள் நடத்துகிற மாநாடுகள், நெல்லை மாவட்டத்திலே சிறப்பான முறையில் நடைபெறவிருக்கின்றன.

சிந்தனைக்கு விருந்தாகவும், சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்லவும் கழகத்தின் அரசியல்—பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றி நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லவும் கழக முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்துகொள்கின்றனர்.

சமுதாய சீர்திருத்த மாநாடு

கல்லக்குடி அறப்போரில் ஈடுபட்டு திராவிட நாட்டு விடுதலைப் போரிலே தனது பங்கை செலுத்திய கொள்கை வீரர் கண்ணதாசன் தலைமை வகிக்கிறார்.

கலையுலகிலே புரட்சிக் கருத்துக்களை உலவச் செய்யும் புரட்சி நடிகர் எம். ஜி இராமச்சந்திரன் அவர்கள் மாநாட்டினைத் திறந்து வைக்கிறார்.

அரசியல் மாநாடு

இராமனுதபுரம் மாவட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கட்டிக் காத்துவரும் காளை, கடமை தவறாது கண்ணியத்துடன் பணியாற்றும் தோழர், ஆச்சாரியாரின் குலக் கல்வித் திட்டத்தை எதிர்த்து தி. மு கழகம் நடத்திய அறப்போரிலே சிறை சென்ற தோழர் ஏ. வி. பி ஆசைத்தம்பி தலைமை வகிக்கிறார்.

விழிப்படைந்த சமுதாயம் என்றால் நாட்டிலே பெண்கள் நிலை உயர வேண்டும்; பெண்ணடிமையைப் பேணி வளர்க்கும் நாட்டிலே புதுமைக் கருத்துக்கள் நிலவாது; தி.மு கழகம் பெண்களின் உரிமைக்காகப் போரிடும் பாசறை; அக்கழகத்தின் வீராங்கனைகளில் ஒருவரான தோழியர் பூங்கோதை மாநாட்டினைத் துவக்கி வைக்கிறார்.

இரண்டு நாட்களில் நடைபெறும் மாநாடுகளிலும், சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும் பிரச்சினைகள் பற்றிக் கலந்து பேச கழகத் தோழர்கள் அனைவருக்கும் ஒரு வாய்ப்பு!

புறப்படுவீர்! புதுமைக் கருத்துக்களைக் கேட்போம்! நமது நாட்டின் முன்னேற்றத்திற்குப் புதுப் பாதை அமைப்போம்! வாழ்வு பெறுவோம்! வாரீர், வாரீர் நெல்லை நோக்கி—என அழைக்கிறோம்!

****

பன்னா வைரச் சுரங்கம்

ரஷ்ய நிபுணர்கள் திட்டம் தீட்டுவர்

ரூ. 160 கோடி பெறுமானமுள்ள வைரம் இந்தியாவுக்குக் கிடைக்கும்

வைரச்சுரங்கத் தொழிலில் பெரும் அளவுக்கு யந்திரங்களை உபயோகிப்பதற்கும் தொழில் விஸ்தரிப்புக்கும் உதவுவதற்கு ரஷ்யா இந்தியாவுக்கு மூன்று நிபுணர்களை இரவல் கொடுத்துள்ளது. அவர்கள் ஏற்கனவே இந்தியா வந்து தங்கள் வேலையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிகிறது.

விந்தியப் பிரதேசத்தில் உள்ள பன்னா என்ற இடத்தில் அவர்கள் விரிவான பூர்வாங்க ஆராய்ச்சி நடத்தி, வைரம் அகப்படும் இடங்களுக்கு படம் தயாரிக்கின்றனர் என்று தெரிகிறது.

பன்னாவில் 750 சதுர மைல் பரப்பில் ஏராளமான வைரக் கனிகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மிகவும் கடினமான யந்திர சாதனங்களை உபயோகித்து வைரங்களை எடுக்க ரஷிய நிபுணர்கள் வழிவகைகள் கூறுவர். இம்மாத முடிவிற்குள் தங்கள் திட்டங்களை தருவார்கள் என்று தெரிகிறது.

இந்த ரஷிய நிபுணர்கள் இந்தியாவில் தங்கும் காலத்தில் அவர்களுக்கு ஏற்படும் செலவுகள் பூராவையும், மாஸ்கோவிலிருந்து இந்தியா வந்து போகும் பிரயாணச் செலவையும், ரஷிய சர்க்காரே ஏற்குமாம்.

இவர்கள் தரும் திட்டத்தால் பன்னாவில் ரூ. 160 கோடி பெறுமானமுள்ள வைரம் கிடைக்குமென்று தெரிகிறது.

Best copy available

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 17—9—54 வெள்ளி

6-வது பிறந்த நாள் விழா!

திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்து நேற்றோடு ஐந்து ஆண்டுகள் முடிந்துவிட்டன.

ஆறும் ஆண்டின் முதல் நாளில் அடி எடுத்து வைக்கிறான், திராவிடத்தை வாழ்விக்க வந்த செல்வக் குமரன்!

இன்று, அவன் ஆறுவது பிறந்த நாள் விழா! லட்சத்திற்கு மேற்பட்ட திராவிடர்களின் திருமனைகளிலே, அவனது பிறந்த நாள் குதூகலத்துடன் கொண்டாடப்படுகிறது.

பல லட்சம் திராவிடர்கள் —"எங்கள் இருண்ட வீட்டில் இன்ப விளக்கேற்றி வைக்க வந்த இளைஞனே! எங்கள் அடர் அடைக்க வந்த தூயவனே! இந்த உழைச் சேற்றை — ஏழுத ஆழத்தை எந்த விதம் நீக்கி நமை எதிர்ப்பார் என ஏளனம் பேசிய எதிரிகளுக்கு, திராவிடத்தின் வீரத்தைக் காட்ட வந்த தீரனே! இயாஸியே! பிள்ளைக் கனியமுதே! எங்கள் பேசும் பொற் சித்திரமே! உலகார் உன்னை மெச்சிப் புகழ்ந்தால் எங்கள் உள்ளந்தான் களிவெறி கொள்ளுதடா! நீ வாழ வேண்டும்; வாழ்விழந்த எங்களை வாழ்விக்க நீ வாழத்தான் வேண்டும்; நன்னெடுங் காலம் — வான் புகழ் கண்டோடு, பராக்கிரமத்தோடு,"—என்று தங்கள் இதய வாழ்த்துக்களைக் குவிக்கின்றனர். அவர்கள் பூரிப்பிலே அர்த்தமிருக்கிறது.

அவன் பிறந்தவுடனேயே குரல்வளையை நெருக்கிக் கொல்லக் காத்திருந்தனர், கொடுரெண்ணங் கொண்டோர் சிலர்! "இந்தக் குழந்தை பிழைப்பது ஏது! பலவீனமான குழந்தை! இதனைப் பாராட்டிச் சீராட்டி, பாலூட்டித் தாலாட்டி வளர்க்கத் தாதிமார்கள் ஏது? பால் ஏது? பணம் ஏது? பாங்கான வீடு ஏது? இறந்துவிடும் இந்தக் குழந்தை! அற்ப ஆயுசுக்காரன்," என்று ஆருடம் கணித்தனர், அச்சத்திற்கும் ஆத்திரத்திற்கும் பாத்திரமான சிலர்.

'குழந்தை வீறிட்டு அழுவதைப் பார்த்தாலே அதன் உயிர் தப்பாது என்று தெரிகிறது; கண்ணீர் வெள்ளத்திலே மிதக்கிறது; இது குழந்தையல்ல — கண்ணீர்த் துளி; கண்ணீர்த் துளி," என்று, குறுகிய மனம் படைத்த அஞ்சாளிகள், பன்னிப் பன்னிச் சொன்னார்கள்!

அந்தக் கண்மணி சாகாதது மட்டுமல்ல; சாகாத தன்முறையினாலாம் திராவிடரின் வாழ்விலும் சந்தனக் காட்டிலே சதிராடும் சனாதனம், அரசியல் ஆதிக்கம், பொருளாதார பேதம் எனும் சர்ப்பங்களை அழித்து ஒழிக்க சமர் புரியும் வீரனாக வளர்ந்துவிட்டான்.

எப்படி வேலனும் விரட்டப்பட்ட வெண்புறாக் கூட்டம், சிதறிச் சின்னாபின்னப்பட்டு, திக்குக்கு ஒன்றாக ஓடிவிடுமோ, அம்மடியே, ஓர் உன்னதமான இலட்சியத்துக்காக, தங்கள் உயிரையும் கொடுக்கச் சித்தமாகி, பல ஆண்டுகள் உழைத்த உத்தமர்கள், 'ஏமாற்றமடைந்தோம்' என்று ஏங்கிப் போய்—'நம்மால் ஆகுமா? நடக்கிற காரியமா? என்னமோ போகட்டும்,' என்று துறவு மனம் கொண்டுவிடக்கூடிய துர்ப்பாக்கிய நிலைமை, ஐந்து ஆண்டுகளுக்கு முன் திராவிட இயக்க வரலாற்றிலே நிகழ்ந்தது.

அந்த வேதனையான இருளைப் போக்க வந்த விடிவெள்ளி—நம்பிக்கை நட்சத்திரம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

பிறக்கும்போது, இரவல் மனையிலேதான் திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்தது; இன்று, 'அறிவகம்' எனும் சொந்த மாளிகையிலே வளர்கிறது.

ஐந்து ஆண்டுகள் — மிகக் குறுகிய காலம்தான்—ஆனால் ஓர் குழந்தையின் வாழ்விலே மிக முக்கியமான நாட்கள்; மாதாவினுடையவோ, மற்றவர்களுடைய சிறு தவறோ மதலையை மயான பூமியில் சேர்க்கும்.

இந்தக் குழந்தையைச் சுற்றியோ, பொறாமை, பொச்சரிப்பு, ஏளனம், எச்சரிக்கை அத்தனையும் கோர நர்த்தனம் புரிந்தன; இவைகள் யாவையும் அச்சமாகக் கருதி ஒதுக்கிவிட்டு, தன்னுடைய இலட்சியப் பாதையிலேயே நடைபோட்டு வந்திருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம்.

மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும், விடுதலைக்கும், பல்வேறு நாடுகளிலே எப்படி, வீரர்களும், விவேகிகளும் போரிட்டனரோ, அப்படிப்பட்ட உயர்ந்த இலட்சியத்தை—"மானாத அடிமைத்தனத்திலிருந்து மீளவைக்க வேண்டும் தாயகத்தை; பழமையை ஒழிக்க வேண்டும்; புது வாழ்வை நிர்மாணிக்க வேண்டும்,' என்ற பொன்னான கருத்தின் அடிப்படையில் அமைந்த உயர்ந்த லட்சியத்தைக் கொண்டது திராவிட முன்னேற்றக் கழகம்.

அதன் ஐந்து ஆண்டு சாதனைகளை எவரும் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது.

ஆலை அரசர்களின் திருமனைகளிலோ, நிலப் பிரபுக்களின் நிழலிலோ வளர்ந்தது அல்ல, திராவிட முன்னேற்றக் கழகம்.

ஏழை எளியவரின் இதயத்திலே, தொழிலாளரின் தோள்களிலே, விவசாயிகளின் வீடுகளிலே, மாணவர்களின் மடியிலே வளர்ந்துள்ள மகத்தான சக்தி அது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் நாம் கடந்து வந்துள்ள பாதை, அதிலே உள்ள பள்ளங்கள், நம்மீது வீசப்பட்ட கணைகள் ஆகியவற்றை ஒரு கண நேரம் நினைத்தால், திராவிடத்தை விடுவிக்கும் பேராற்றல் மிக்கதோர் படைவரிசை தோன்றிவிட்டது என்ற உண்மை புலனாகும்.

துப்பாக்கியின் துந்துபி திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தாலாட்டாக அமைந்தது.

குன்றத்தூர் துப்பாக்கிப் பிரயோகத்தின் வெடிச் சத்தத்திற்கு இடையிலேயே தான் தோன்றினோம்.

ஆச்சாரியாரின் அனுக்கிரகம், கல்லக்குடியிலும், தூத்துக்குடியிலும் ஆறு திராவிட வீரர்களின் உயிரைக் குடித்தது.

கருப்புக் கொடி காட்டிய நேரத்திலேயும், கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டத்தின்போதும் தடியால் தாக்கப்பட்டு, தழும்புகளைப் பெற்று, அவை, 'விடுதலைப் போரின் வெற்றிப் பதக்கங்கள்' எனக் கருதும் வீரர் பலர் நம்மிடையே பெருமையுடன் உலவுகின்றனர். மும்முனைப் போராட்டத்தில் தங்கள் வீடு வாசல்களை மறந்து, மனைவி மக்களை மறந்து சிறைச்சாலையை பூஞ்சோலையாகக் கருதி ஆறாயிரவர் தண்டனை ஏற்றது தரணிக்கு நமது விடுதலை தாகத்தைத் தம்பட்டமடிக்கும் சம்பவமாய் அமைந்தது; கொண்ட கொள்கைக்காக 'எதையும் ஏற்கும் இதயம்' பெற்றவர்கள் என்ற கீர்த்தியைச் சம்பாதித்துத் தந்தது.

கைத்தறி நெசவாளர் துயர் துடைக்க நாம் மேற்கொண்ட இயக்கம், இன்றைய தினம், 'ஆமதாபாத், பம்பாய் வேட்டிகளைத்தான் கட்டுவேன்'—என்று எண்ணிய வாலிபர்களை, 'திராவிடத்தின் நெசவாளி நெய்த ஆடையையே உடுப்பேன்,' என்று சொல்லச் செய்தது மட்டுமல்ல—நடத்திக்காட்டவும் செய்திருக்கிறது.

தஞ்சைத் தரணி புயலால் தாக்குண்டபோது—பல லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டபோது—பல கோடி ரூபாய் சேதமானபோது, இன்று அசாம், பீகார் வெள்ளம் நெருக்குக ஆகாய விமானத்திலே சென்று பார்வையிடும் நேரு, ஒரு அனுதாபச் சொல்லும் சொல்லாமல்—திராவிடத்தின் தென் பகுதியிலே கேரள நாட்டின் மலையுச்சியில், விலங்குகள் நீராடும் வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்த நேரம், திராவிடரின் வேதனையைத் துடைக்க, நாடகமாடி, கைத்தறி ஆடைகள் வழங்கினோம்.

ஐந்து ஆண்டுகள், நமது முன்னணி வீரர்கள், சண்டமாருதமெனச் செய்த பகுத்தறிவுப் பிரச்சாரம், நாட்டிலே அறிவுத் தீயைக் கொளுத்தியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் அதன் செய்திகளை வெளியிட ஏடு இல்லை என்ற நிலை மாறி ஏறக்குறைய இன்று இருபது ஏடுகள் வாரந்தோறும் வலம் வருகின்றன. ஒரு மந்திரியையே நடக்குமா, நடக்காதா என்ற நிலை போய்—இத்தனை ஏடுகளும் உலவுகின்றன—எந்த ஏடும் அவ்வளவுமில்லை, கவிழவும் இல்லை—என்றால், நாட்டு மக்களின் மதிப்பிலே நமது கருத்துக்களுக்கு இருக்கும் மதிப்பைத் தவிர வேறு என்ன என்று கேட்கிறோம்.

நமது மாவட்ட மாநாடுகளை ஒவ்வொன்றும் விடுதலைப் படையின் அணிவகுப்புகளாகவே அமைந்திருந்திருக்கின்றன.

கலைத் துறையில்—நாடகங்கள், சினிமா மூலம் பழமைக்கு நல்ல சவுக்கடி கிடைத்திருக்கிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் நடைபெற்ற மாநில மாநாடு, நமது வலிமையையும், பொலிவையும் மாற்றாருக்கும் மாட்டவருக்கும் உணர்த்தியுள்ளது. திராவிடத்தின் வரலாற்றில் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட தொண்டர் கூடிய மாநாடு வேறு இல்லை என்ற வரலாற்றைச் சிருஷ்டித்தோம்.

'கல்லணையிலும், கன்னந்தாவிலும் நடைபெறும் வாலிபர் மாநாடுகளை, ஆவடியிலும் அம்பத்தூரிலும் நடைபெறச் செய்தால்தான், கரையும் காங்கிரஸைக் காப்பாற்ற முடியும்,' எனும் நிலைக்கு மாற்றார் வர வேண்டிய அளவிற்கு நமது வெற்றிப் பட்டியல் பெருகியுள்ளது.

சங்கமெனும் தொட்டிலின் வளர்ந்த பிள்ளையாம் தமிழ்—அந்த வீரரின் வெண்கலத் தொனியிலே விளையாடுகிறதே—அவர் யார்?—யாரா?—நெடுஞ்செழியன்; இடியோ, புயலோ, எரிமலையோ என முழக்குகிறாரே, இந்த இளைஞர் பெயரென்ன—அவர்தான் சம்பத்; எலும்பு உருவமாயிருக்கிறாரே—காற்றடித்தால் விழுந்துவிடுபவர் போல இருக்கிறாரே—அந்த உருவத்திற்குள்ளே எவ்வளவு பெரிய எண்ணங்கள் உள்ளன—உலகங்களைத் திரித்து பொறி போல தெரிகிறதே—இவர் பெயர்?—இவர்தான் என். வி. நடராசன்; மூட நம்பிக்கையின் முடை நாற்றம் வீசுகின்ற கல்லூரில், தென்றலையும் தீயையும் குழைத்து, பகுத்தறிவு கற்பூர மணம் கமழச் செய்யும் இந்த கட்டிளைஞர்—கருணாநிதி; அழுத்தந்திருத்தமாகப் பேசி யாரையும் வியக்க வைக்கும் அந்தக் குள்ள உருவம் யார் என்கிறீர்களா? அவர்தான் மாணவர் உள்ளத்தில் தனக்கென ஒரு இடத்தைப்பிடித்துக்கொண்ட தோழர் கே. ஏ. மதியழகன்; கழகத்திலேயே வயதிலே மூத்தவர்போல் தோன்றுகிறார்—ஆனால், காரியமாற்றுவதிலே மிடுமிடுக்கான இளைஞர்போல் தோன்றுகிறாரே, அவர் யார்—[illegible]ம்பலனார்—இப்படி பல ஆற்றல் மிக்கவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சூழ்ந்து நிற்கின்றனர்.

அத்தகைய ஆயிரம் ஆயிரம் வீரர்களின் ஆற்றல் இலட்சியத்தைச் சென்றடைய [illegible] கொள்ளாது; தங்களது வியர்வை, இரத்தம், கண்ணீர் ஆகியவற்றை காணிக்கையாக்கக் காத்துக் கிடக்கின்றனர்.

நமது கடந்த கால நடவடிக்கைகள், நமக்குப் பெரும் நம்பிக்கையை அளிக்கின்றன, ஆனால், நாம் எதிர் காலத்திலே செய்ய வேண்டியவை ஏராளம். அதற்கு ஆறுவது பிறந்த நாளில் இன்று உறுதி எடுத்துக் கொள்வோம்.

திராவிட முன்னேற்றக் கழகமே! திராவிடத்தின் திருமகனே! நீ வாழ்க! [illegible] வாழ்க! [illegible] எதிர்காலமே! நீ [illegible] திரையில் [illegible] சித்திரங்களை [illegible] போகிறாயோ—எங்களுக்குத் தெரியாது; ஆனால் இன்று மட்டும் எங்களுக்குத் தெரி-

ஒரு லட்சம் டன் கோதுமை!

இந்தியா வாங்குகிறதாம்!

லண்டன், செப். 15—

இந்தியா சுமார் ஒரு லட்சம் டன் கனடிய கோதுமை வாங்க உத்தேசித்துள்ளதாம்.

லண்டனில் உள்ள 'மார்கெட்'டுக்கு வந்துள்ள அறிவிப்பு ஒன்றின்படி இதுவரை செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் ஏற்றுமதி செய்வதற்காக 40,000 டன் கோதுமை ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

தொடர்ந்து மிஞ்சியுள்ள 60 ஆயிரம் டன் கோதுமையும் அனுப்பப்படும் என்றும் தெரிய வருகிறது.

மிஞ்சியுள்ள அரிசியை எடுத்துக்கொள்க!

இந்தியாவை, பர்மா வற்புறுத்துகிறது

பர்மாவிலிருந்து இந்த ஆண்டு இறுதிக்குள் வாங்க வேண்டிய தாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிற ஒன்பது லட்சம் டன் அரிசி முழுவதையும், உடனே இந்தியாவுக்கு எடுத்துச் செல்லுமாறு பர்மிய அரசாங்கம் வற்புறுத்துவதாகத் தெரிகிறது.

இதுவரையில் 2,60,000 டன் அரிசியை இறக்குமதி செய்து கொண்டதையும், மிஞ்சியுள்ள எல்லா அரிசியையும் நல்ல 'ரக' மானதாக பர்மா தரும்போது இறக்குமதி செய்துகொள்ளவும் பர்மாவுக்கு இந்தியா பதில் அனுப்பியுள்ளதாம்.

திரு—கொச்சிக்கு பாகிஸ்தான் அரிசி

30 ஆயிரம் டன் இறக்குமதி!

திரு—கொச்சி அரசாங்கத்திற்கு 26,000 டன், 'ஜெயா' அரிசி பாகிஸ்தானிலிருந்து கிடைக்கும் என்று தெரிகிறது.

இந்திய அரசாங்கம் தந்துள்ள அனுமதியின் பேரிலேயே, சுமார் 30,000 டன் அரிசியை பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்து கொள்வதாக திரு—கொச்சி அரசாங்கத்தின் அரிசி விநியோக அதிகாரி குறிப்பிட்டார்.

இந்தியாவில் கிடைக்கிற அரிசியின் விலையைக் காட்டிலும், இப்போது இறக்குமதி செய்யப்படுகிற பாகிஸ்தான் அரிசி மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்கும் என்றும், ஏற்றுமதியைக் கணக்கிடுவதற்காக, கராச்சி சென்று கொண்டிருக்கும் அந்த திரு—கொச்சி அதிகாரி குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் அரிசியை விநியோகிப்பதனால் சர்க்காருக்கு எவ்வித நட்டமும் இல்லை என்றும் அவர் கூறினார்.

மத்திய சர்க்கார், மாநில சர்க்கார்கள் ஆகியவற்றின் வரவு-செலவுக் கணக்குகளில் கல்வி அபிவிருத்திக்காக, 1953-54ல், சுமார் 93.4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1952—53, 1951—52 ஆகிய ஆண்டுகளில் அதற்காக முறையே 82.6 கோடி ரூபாய், 74.1 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருந்தது.

புது—திராவிட முன்னேற்றக் கழகத்தின் இருவண்ணக் கொடியின் கீழ், இந்த மண்ணில், விடுதலை ராஜ்யம் உதயமாகப் போகிறது—[illegible]!

பிறக்கும்போது அடிமைத் திராவிடத்தில் பிறந்தோம்—திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்துவிட்டது—இனி இறக்கும்போது, சுதந்திரத் திராவிடத்தின் பிரஜைகளாகத்தானே சாகப் போகிறோம்!

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

திருநெல்வேலி, செப். 13—

தூத்துக்குடி சதி வழக்கில் மேலும் சில பிராசிக்யூஷன் சாட்சிகள் செஷன்ஸ் நீதிபதி திரு கே. என். ராதாகிருஷ்ண முதலியார் முன்பு விசாரிக்கப்பட்டனர்.

தூத்துக்குடி, கொருக்கலணைக்கும் அதிகாரி ஸ்டேஷன் ஆபீசர் ஆர். சிவசாம சுந்தரம் தமது சாட்சியத்தில் கூறியதாவது:—

"சென்ற வருடம் ஜூலை மாதம் 15-ந் தேதி எட்டயபுரம் லெவல் கிராசிங் அருகில் உள்ள பாலத்தில் நெருப்பு வைத்திருப்பதாக போலீசாரிடமிருந்து தகவல் வந்தது; உடனே ஸ்தலத்திற்குச் சென்றேன்; இரண்டு மர ஸ்லீப்பர் கட்டைகள் தீயினால் கருகியிருந்தன; நான் உடனே தீயை அணைத்தேன்; மேலும் தண்டவாளத்தில் 19 மரச் சக்கைகள் காணாமல் போயிருந்தன; ஒரு இடத்தில் இரண்டு தண்டவாளங்கள் சந்திக்குமிடத்திலுள்ள இடைவெளியில் ஒரு இரும்பு ஆணி சொருகப்பட்டிருந்தது; பக்கத்திலுள்ள டெலிபோன் கம்பி சேதமடைந்திருந்ததைப் பார்த்தேன்."

☆

பின்னர், டெலிகிராப் லைன் மேன் ச முவேல் சாட்சியமளித்தார். அவர் கூறியதாவது:—

"சென்ற வருடம் ஜூலை மாதம் 15-ந் தேதி பிற்பகலில் தூத்துக்குடி தந்தி சூப்பிரண்டெண்டு என்னிடம் மேலூர் ரயில்வே ஸ்டேஷனருகில் டெலிபோன் கம்பி சேதமடைந்திருப்பதால், சரி செய்யும்படி உத்திரவிட்டார்; அதன்படி அங்கு சென்று நான்கு கம்பங்களில் சேதமடைந்திருந்த 'இன்சுலேட்டர்'களை மாற்றி, சேதமடைந்திருந்த கம்பிகளையும் சரிசெய்தேன்."

★

பின்னர் சப்-மாஜிஸ்திரேட் ரங்கப்பா நாயுடு விசாரிக்கப்பட்டார். அவர் தமது சாட்சியத்தில் கூறியதாவது:—

"சென்ற வருடம் செப்டம்பர் மாதம் 22-ந் தேதியன்று 50-வது எதிரி அருணாசலத்தை கொக்கிரகுளம் சப்-ஜெயிலில் காவலில் வைக்க உத்திரவிட்டேன்; பின்னர் மூன்று தினங்கள் சென்றதும் தூத்துக்குடி போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டரின் வேண்டுகோளின் பேரில் ஒரு அடையாள அணிவகுப்பு நடத்தினேன்; ராமசிவம் பிள்ளை ராஜலக்ஷ்மி ஆகிய சாட்சிகள் 50-வது எதிரியை அடையாளம் காட்டினர்."

★

தூத்துக்குடி ஹார்வி மில் குமாஸ்தா கந்தசாமி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"சென்ற வருடம் ஜூலை மாதம் 14-ந் தேதி சில தொழிலாளர்கள், மதுரையில் நடைபெற்ற ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்று லீவு கேட்டனர்; லீவு கேட்டவர்களின் விபரங்களைத் தனித்தனிக் காகிதங்களில் குறித்து, அவைகளை ஸ்பின்னிங் மாஸ்டரிடம் அனுப்பினேன்; மேற்குறித்த காரணங்களுக்கு லீவு கேட்டவர்களுக்கு லீவு மறுக்கப்பட்டது; சுமார் 60 தொழிலாளர்கள் அன்று தினம் லீவு கேட்டனர்; லீவு விபரங்களைக் குறித்துக்கொள்ள தனியாக ரிஜிஸ்டர் ஒன்றும் கிடையாது."

நேரு-மாலன்கோவ் சந்திப்பு

அண்மையில், தான், சீனாவுக்குச் செல்லும்போது சோவியத் பிரதமர் மாலன்கோவ் சீனாவில் இருந்தால், தான், அவரைச் சந்திக்க இயலும் என்று பண்டித நேரு இந்திய மேல் சபையில் கூறினார்.

யுத்தம் மனித நாகரீகத்தை அழிக்கும்!

— (:) —

கிழக்கு - மேற்கு நாடுகள் ஒரு சேர வாழ்வது சாத்தியமே!

அட்லி கருத்து

வெல்லிங்டன், செப். 15—

"சமாதானமாக, ஒரு சேர வாழ்வதற்கான பொது வழிகளை, கிழக்கு - மேற்கு நாடுகள், ஒன்று சேர்ந்து காண முடியும்; ஒரு சேர வாழ்தல் சாத்தியமில்லாவிடின் உலகம் இரண்டாகப் பிரிந்தே கிடக்கும்; யுத்தம் மூளும்; யுத்தம் என்றால், நாகரீகத்தின் அழிவு என்று பொருள்."

இவ்வாறு, பத்திரிகையாளரிடம் பேசுகையில், அட்லி குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

"பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தூதுக் குழு, ரஷியா, சீனா ஆகிய நாடுகளுக்குச் சென்றதினால் சிக்கல் ஓரளவு குறைந்துள்ளது. ஐ. நா.-வில் செஞ்சீனா அங்கீகரிக்கப்பட்டால், சிக்கல் இன்னும் வெகுவாகக் குறைக்கப்பட முடியும்; ஆனால், சமீபத்தில் இடைக்காலத் தேர்தலை எதிர்நோக்கியுள்ள அமெரிக்கா இதை ஏற்றுக் கொள்ளுமா என்பது எனக்குத் தெரியாது."

சீனாவில் சிறை வைக்கப்பட்டிருந்த அமெரிக்கர் சிலர் அட்லியின் சீன வருகையின் பலனாய், விடுவிக்கப்பட்டனர் என்று வெளிவந்த செய்தி உண்மைதான் என்றும், ரஷியத் தலைவர் மாலன்கோவ், ஸ்டாலினுக்கு இருந்த செல்வாக்கைப் பெற்றில்லாவிடினும், ஒரு சிறந்த திறமைமிகு புத்திசாலியான மனிதர் என்பதைத் தான் உணர்ந்ததாகவும் அட்லி குறிப்பிட்டார்.

பிரெஞ்சிந்தியப் பேச்சுவார்த்தை!

பிரான்ஸ் காலம் தாழ்த்துகிறதாம்!

புதுடில்லி, செப். 15—

பிரெஞ்சிந்தியத் திட்டுக்களின் விடுதலை குறித்து, பிரான்ஸ் இந்தியா ஆகிய நாடுகளிடையே நடந்துவரும் பேச்சுவார்த்தைகள் என்ன காரணத்தாலோ எதிர்பாராதவிதமாக மிகவும் தாமதமாகின்றன.

பிரெஞ்சு அதிகாரிகள் மிகவும் எச்சரிக்கையுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திவருவதாகவும், ஏதாவது ஒருவகை முடிவு காண இன்னும் பல நாள் ஆகக்கூடும் என்றும் டில்லி கருதுவதாகத் தெரிகிறது.

மிக முக்கியமான சில அம்சங்களில் அடிப்படை ஒற்றுமை இருசாரரிடமும் ஏற்பட்டாலன்றி, பேச்சுவார்த்தைகள் எந்தவித முடிவையும் தரமுடியாது என்றும், பல்வேறு பிரச்னைகள் இருதரப்பாலும் விவாதிக்கப்பட்டு வருவதாகவும் தெரிகிறது.

தாய் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நிர்ணயமற்ற குழப்படியான நிலைமையால், பிரெஞ்சு அதிகாரிகள், வெகு தாமதமாக, மிகுந்த எச்சரிக்கையுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திவருகிறார்களாம்.

பிரெஞ்சு அரசாங்கம் எப்படி இருந்த போதிலும் பிரெஞ்சிந்தியப் பகுதியை இந்திய அரசாங்கத்திடம் [illegible] ஒப்படைக்க [illegible] தம்பிக்கையில் சிறிதும் தளராது இருக்கின்றனராம்.

ரஷ்யா—ஜப்பான் உறவு

வெளிநாட்டமைச்சர் அறிவிப்பு

டோக்கியோ, செப். 15—

"ரஷ்யா அனுப்புகிற சமாதான ஒப்பந்தத் திட்டத்தின் நிபந்தனைகள் நல்லவைகளாக இருந்தால், அதை ஜப்பான் ஏற்றுக்கொள்ளத் தயங்காது," என்று, ஜப்பான் வெளிநாட்டு அமைச்சர் கூறியுள்ளார்.

1951-ல் நடைபெற்ற சான் பிரான்சிஸ்கோ மாநாட்டின் சமாதான ஒப்பந்தத்தில் ரஷ்யா கையெழுத்திடாததால், இன்னும், ரஷ்யா—ஜப்பான் போர் அமுலில் இருப்பதாகத்தான் அர்த்தம்.

"சான் பிரான்சிஸ்கோ ஒப்பந்த அடிப்படையில், ரஷ்யாவோடு அரசியல் உறவு கொள்ளுவதில் ஜப்பான் விருப்பமாகவே இருக்கிறது," என்று, அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

ஜப்பான் தயாராக இருந்தால், அதனோடு எவ்வுறவையும் கொள்ள ரஷ்யா தயாராகவே இருக்கிறது என்று, சமீபத்தில் மாலன்கோவ் விடுத்த அறிக்கையின்மீது, ஜப்பானில் புதிய தெம்பு பிறந்திருக்கிறதாம்.

சிறைச்சாலை, லட்சியத்தை சிதைத்துவிடாது!

விடுதலைப் பயணம் தொடரும்!

டாக்டர் ஜெட்டி ஜகன் முழக்கம்!

ஜியார்ஜ்டவுன், செப். 14—

"சிறைப்படுத்தியோ, பயமுறுத்தியோ, பிரிட்டிஷ் கயானாவின் விடுதலைப் போராட்டத்தைத் தடுத்துவிட முடியாது," என்று, ஆறுமாதம் சிறைப்பட்டு விடுதலையானபோது, பிரிட்டிஷ் கயானாவின் முன்னாள் பிரதம மந்திரியும், மக்கள் முன்னேற்றக் கட்சியின் தலைவருமான டாக்டர் ஜெட்டிஜெகன், குறிப்பிட்டார்.

ஜெட்டி ஜெகனும், இன்னும் இருவரும், தடை உத்தரவு ஒன்றை மீறிய குற்றத்திற்காக ஆறுமாதம் சிறை தண்டனை விதிக்கப்பட்டிருந்தனர்.

சிறை மீண்ட பின்னும் அவர் ஜியார்ஜ் டவுன் நகரத்தை விட்டு வெளியேற முடியாது. அதற்கான தடை உத்திரவு இன்னும் அமுலில் இருக்கிறது. அந்த உத்திரவுப்படி, வாரத்தில் இரண்டு நாட்கள் அவர் ஜியார்ஜ் டவுன் போலீசாருக்கு 'தரிசனம்' தர வேண்டுமென்கிற கட்டுப்பாடும் உள்ளது.

சிறை மீண்ட அவர், சிறைக்குள் தான் இருந்தபோது, சிறைச்சாலை நிலைகள் படுமோசமாக இருப்பதைக் கண்டித்து மூன்று நாட்கள் உண்ணாவிரதம் இருந்ததாகக் கூறினார்.

அவர் விடுதலையானதை ஒட்டி மோராண்ட்ஜெம் இடத்தில் 4000 சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் 24 மணி நேர அடையாள மறியல் செய்தனர்.

படை பலம் வலுப்படும்

பாக். பிரதமர் அறிவிப்பு

காராச்சி, செப். 15—

"பாகிஸ்தானின் பாதுகாப்புப் படையணிகளைப் பலப்படுத்தி, எந்த நேரத்திலும் நடவடிக்கைகளுக்குத் தயாராக வைத்திருக்க வேண்டியது அவசியமும், அவசரமுமாக இருக்கிறது," என்று, பாகிஸ்தான் முதல் அமைச்சர் கூறியுள்ளார். மேலும் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:—

"பாகிஸ்தான் அரசாங்கம் கடந்த ஏழு ஆண்டுகளாக, இராணுவ சக்தியை வலிமை குன்றாமல் வைத்துக் கொள்வதற்காகப் பெரும் பணத்தையும், உழைப்பையும் செலவிட்டு வருகிறது.

'பாகிஸ்தானைப் பாதுகாக்க இராணுவ சக்தி நல்ல முறையில் இயங்கினாலன்றி, முடியாது,' என்ற திட்டம்தான் அரசாங்கத்தின் முன் என்றுமே நிற்கிறது."

"நாம், பிறர் சுதந்திரத்தின் மீது ஆசை வைக்கவில்லை; ஆயினும், நமக்கு எதிரிகள் இல்லை என்று சொல்லிவிட முடியாது; பிறர் சுதந்திரத்தைப் போல நமது சுதந்திரமும் பாதுகாக்கப்பட நமது இராணுவம் பூரண வலிமை பெற்றிருக்க வேண்டும். இது இன்று அதிக அவசியமான ஒரு காரியமாகி விட்டது" என்று அவர் கூறினார்.

பிற்பட்ட வகுப்பினரல்லாதவருக்கு இலவசக் கல்வி

ஆண்டுதோறும் 2500 ஏழை மாணவர் பயனடைவர்

பம்பாய் அரசாங்கத்தின் திட்டம்

பம்பாய், செப். 15—

பிற்பட்ட வகுப்பினரல்லாத மாணவர்களில் 2500 பேர்களுக்கு சர்க்காரால் நடத்தப்படாத கல்லூரிகளில், கல்வி பயில்வதற்கு ஆண்டுதோறும் இலவசக் கல்வி வசதி செய்து தருவது என்று முடிவு செய்துள்ளது பம்பாய் அரசாங்கம். இந்த ஆண்டு முதல் அமுலாகும் இத்திட்டத்தினால் சர்க்காருக்கு சுமார் ரூ 5 லட்சம் செலவாகுமாம்.

இந்த இலவசக் கல்விக்கான உபகாரச் சம்பளம், கலை, விஞ்ஞானம், வர்த்தகம் சட்டம், இன்னும் ஆசிரியப் பயிற்சி ஆகிய துறைக் கல்வி பெறுவதற்குத் தரப்படும்.

இந்த திட்டப்படி பலன் பெறுவோரில், மூன்றில் இரண்டு பங்கு மாணவர்கள், கிராமப் புறத்திலிருந்து வருபவர்களாயிருப்பர்.

சர்க்கார் நிர்வகிக்கிற கல்விக் கூடங்களில், ஏழை மாணவர்களுக்கான உபகாரச் சம்பள வசதியும், எல்லா அங்கீகரிக்கப்பட்ட பிற்பட்ட வகுப்பினர்க்கும் சம்பளமே இல்லாத கல்வி வசதியும் தரப்பெறுகின்றன.

வெள்ள நிவாரணம்

சினிமா நடிகர்கள் உண்டியல் வசூல்

பம்பாய், செப். 15—

அசாம், வங்காளம், பீகார் ஆகியமாநிலங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளக் கொடுமைக்காளாகியுள்ள மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு, நிதி திரட்டுவதற்காக, பம்பாயில் உள்ள பிரபல நடிக, நடிகையர்கள் தெருக்கள் தோறும்சென்று மக்களிடம் உண்டியல் வாங்கினர், பொருள்களை சேகரித்தனர் என்று தெரிகிறது.

நிறைந்த லாரிகளில் பிரபல நட்சத்திரங்கள் அமர்ந்து கொண்டனராம். உபநடிக, நடிகையர் ஆயிரத்திற்கும் அதிகமாக உண்டியல் எடுத்து பணம் வசூலித்தனராம்.

சவரத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம்

பெரியகுளம், செப். 15—

11—9—54ல், வை. பெரியசாமி தலைமையில் மேற்படி சங்கம் அமைக்கப்பட்டு, நிர்வாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: தலைவர்: வி சின்னசாமி; துணைத் தலைவர்: ஏ. அப்பன்; செயலாளர்: எம். பொன்னையா; துணைச் செயலாளர்: எம். ஆர். நடராசன்; பொருளாளர்: கே. ரத்தினவேல்.

சென்னைத் தமிழாசிரியர் கழகம்

12—9—54 மாலை 4 மணிக்கு சென்னை, பச்சையப்பன் உயர் பள்ளியில் நடைபெற்ற தமிழாசிரியர் கழகப் பொதுக்கூட்டத்தில், திரு வி. க., பாரதியார், மறைமலையடிகள் ஆகியோரின் நினைவு நாட்களைக் கொண்டாடும் முறையில், புலவர்கள் பலர் பேசியபின், கழக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—தலைவர்: திரு. டாக்டர் அ. சிதம்பரநாதம் செட்டியார்; துணைத் தலைவர்கள்: மயிலை சிவமுத்து, ஏ கிருஷ்ணமூர்த்தி, தேவநேயப்பாவாணர், ஐயா நாயக்கர், ஆர். கிருஷ்ணமூர்த்தி; செயலாளர்கள்: டி. முருகேசன், பி. செல்வராசன்; பொருளாளர்: இ கிருஷ்ண ராமானுஜம். மேற்படி கழக நிதிக்காக நாடகம் ஒன்று நடத்த ஒரு உட்குழு அமைக்கப்பட்டது.

திருச்சி மாவட்ட ஓட்டல் தொழிலாளர் சங்கம்

11—9—54 இரவு 10 மணிக்கு திரு பி. கே. சங்கர மேனன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், 15—8—54 தேதியன்று சம்பளத்துடன் விடுமுறை கொடுக்கப்படாத தொழிலாளர்களுக்கு, மேற்படி தினத்திற்கும் பதிலாக ஒரு நாள் விடுமுறை யாவது அல்லது அதற்கான சம்பளமாவது கிடைக்கும்படி அதிகாரிகள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

திருமணங்கள்

★

12—9—54 காலை 10 மணிக்கு பொன்மலைப்பட்டியில் டாக்டர் பி. எஸ். பி. நாயுடு இல்லத்தில், தோழர் கே. ராமையன்—தோழியர் தாயம்மாள் சீர்திருத்தத் திருமணம் தோழர் வி. பராங்குசம் தலைமையில் நடைபெற்றது. 'திருமணத்தில் திருத்தம் ஏன்' என்பது பற்றித் தோழியர் நீலாம்பாள், தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, முவை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

* * *

11—9—54 காலை 10 மணி[illegible]
திரு. கலைச்செல்வபதி [illegible]
மன்குடியார் எம்[illegible]
கள் தலைமையி[illegible]
இ பாரதி[illegible]
சகோதர[illegible]
விழா[illegible]
இல்[illegible]
தி[illegible]

ஊழலில் உழலும் பூரி ஜெகநாதர்!

— (:) —

'மகாபிரசாதம்' மட்டரகமாகிறது!

பக்தியை மறந்த பூசாரிகள்!

பணம் சம்பாதிக்க எண்ணுகின்றனராம்!

கோயில் கணக்கும், நிர்வாகியின் சொந்தக் கணக்கும் ஒன்றும்!

பூரி ஜெகநாதர் கோவில் நிர்வாகம் குறித்து சர்க்கார் தரும் நற்சாட்சி!

கட்டாக், செப். 16—

பூரி நகரில் உள்ள ஜெகந்நாதர் ஆலயத்தின் நிர்வாகம் பற்றிய அறிக்கை விசேட அதிகாரியால் தயாரிக்கப்பட்டுள்ளது. சர்க்கார் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் காணப்படுவதாவது :—

"ஒரு சிலரைத் தவிர, கோவிலில் வேலை செய்யும் மற்றெல்லோரும் பக்தி சிரத்தையை இழந்துவிட்டனர்; இந்தப் புனிதக் காரியங்களைச் செய்வதற்கு அவர்களின் முன்னோர்கள் கொண்டிருந்த அந்த பக்தி மனப்பாங்கு இப்போதுள்ள கோவில் பணியாளரிடம் இல்லை; இப்போதுள்ள கோவில் பணியாளர்கள் எல்லாரும் பொறுப்புணர்வை மறந்து பொருள் சேர்க்கும் எண்ணங் கொண்டவர்களாகிவிட்டனர்.

"*பலமுறை சொல்லி அனுப்பியும், கோவில் காரியங்களைச் செய்ய குறித்த காலத்தில் கோவில் பணியாளர்கள் வருவதில்லை.*

"ஜெகந்நாதப் பெருமானுக்குப் படைப்பதற்காக தயாரிக்கப்படும் 'மகா பிரசாதம்,' சுத்தமான அசல் நெய்யில் தயாரிக்கப்பட வேண்டியதற்கு மாறாக, கோவில் பூசாரிகள் 'பிரசாத'த்தை மிக மோசமான தாவரக் கொழுப்பினால் செய்து படைக்கிறார்கள்.

"*தினசரி வருகிற சுமார்* 2,000 *யாத்திரிகர்களுக்கு இந்த 'பிரசாதம்' தாம்படுவதற்கு பல நாட்களில் மிகத் தாமதம் ஏற்பட்டிருக்கிறது; சில நாட்களில், பக்தர்களான யாத்திரிகர்கள்* 12 *மணி நேரம் கூட பகவானுக்குப் படைக்கும் பிரசாதம் பெறுவதற்காகக் காத்திருக்க வேண்டியிருக்கிறது.*

"இத்தனைக்கும் மேலாக, கோவிலின் நிர்வாகியாக இருக்கிற பூரி ராஜா, பல வருடங்களாகக் கோவிலின் வரவு — செலவுக் கணக்குகளையும், தனது சொந்தக் கணக்குகளையும் ஒன்றாகவே எழுதி வருகிறார். சொந்தக் கணக்கையும், கோவில் கணக்கையும் அவர் தனித்தனியாக எழுதுவதே இல்லை."

மேலும் அந்த அறிக்கையில் காணப்படுவதாவது :—

"*பக்தர்களுக்கு கோவிலுக்குள் சரியான பாதுகாப்பில்லை. பகவானைக் கண்டு தரிசிக்க வரும் யாத்திரிகர்களிடமிருந்து பணம், மூட்டை முடிச்சுக்களை 'பிக்பாக்கட்' அடித்துக்கொண்டும், திருடிக் கொண்டும் விடுகின்றனர், பலர்! இந்த அவலநிலையிலிருந்து பக்தர்களும், யாத்திரிகர்களும் தப்ப, போதுமான பாதுகாப்பும் பந்தோபஸ்தும் இன்றுவரை கோவில் நிர்வாகிகளால் ஏற்பாடு செய்யப்படவில்லை.*"

தூதுவர் தேசாய் நாடு......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சம்மதமில்லை என்றும், இரு நாட்டுப் பிரதமர்களிடையே பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுள் சமரசத்திற்கு வழி உள்ளதென்றும் மந்திரி சபையில் பொதுவாக கருத்து நிலவுகிறதாம்.

இலங்கை இந்தியர் பிரச்சினையில் காணப்படுகிற நெருக்கடி காரணமாக இலங்கை சர்க்காரின் போக்கில் மாற்றம் ஏதும் காணப்படும் என்று சொல்வதற்கில்லையாம். இந்தியர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவதில் இலங்கையின் மனப்பான்மையில் மாற்றம் ஏதும் கிடையாது என்று உத்தியோக வட்டாரங்களில் தெரிகிறது.

★

ஒப்பந்தத்தை ரத்து செய்யக் கோரிக்கை

இலங்கை எம்.பி.-க்கள் தீர்மானம் செய்வர்

கொழும்பு, செப். 16— இந்திய—இலங்கை ஒப்பந்தம் ... செய்யப் படவேண்டும் ... என்றுமாறு கோரும் ... இலங்கை ... பிரதமர் டட்லி ... ஏர்தன் இலங்கை, இந்தியா உறவு பற்றி விவாதிப்பதற்காக சர்க்கார் தரப்பு மக்கள் சபை உறுப்பினர் குழு ஒன்று செப் 21-ல் கூடவிருக்கிறது. அந்தக் குழுவில் விவாதிப்பதற்காக மேற்கண்ட தீர்மானமும், இன்னும் இரண்டு தீர்மானங்களும் உரு

'காதல் புரியும் உரிமை!'

வேலை நிறுத்தம் செய்து நிலை நாட்டப்பட்டது!

டோக்கியோ, செப். 16— ஜப்பானில் உள்ள ஓமிபட்டு நூல் ஆலையில் வேலை செய்கிற ஆயிரக்கணக்கான இளைஞர்களும், பெண்களும், தாங்கள் கடந்த மூன்று மாத காலமாக 'காதல் புரியும் உரிமை' கோரி நடத்திவந்த வேலை நிறுத்தத்தில் வெற்றி கண்டனர் என்று தெரிகிறது.

ஆலையின் அதிபரும் ஆலைத் தொழிலாளரின் பிரதிநிதிகளும் இது பற்றி ஒரு சமரச உடன்பாட்டிற்கு வந்துள்ள பின் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது.

இந்தத் தொழிலாளர்கள் கடந்த மூன்று மாதங்கட்கு முன் பல கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் துவங்கினர்.

தாங்கள் மணந்து கொள்ளவோ அல்லது தங்களுக்குப் பிடித்தமானவர்களைக் காதலர்களாகக் கொள்ளவோ அனுமதி தருவதில்லை என்றும், ஆலை அதிகாரிகள் தங்கட்கு வரும் கடிதங்களைப் பிரித்தும் பார்ப்பதாகவும், புத்த மத விழாக்களில் கலந்துகொள்ள வற்புறுத்தப்படுவதாயும், வேலை நேரத்திற்குப் பின், தொழிற்சாலைப் பிரதேசத்தை விட்டு வெளியே சென்று வர அனுமதி பெறவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுவதாயும், இந்த பட்டு நூல் தொழிலாளர்கள் ஆலை நிர்வாகிகள்மீது குற்றம் சாட்டினர்.

13,000 *தொழிலாளர்களைப் பாதித்த இந்தப் பிரச்சினைக்காக ஏற்பட்ட தகராறில் போலீசாருடன் 'மோதிக் கொண்டதால்' பல இளம் பெண்கள் காயப்பட்டனர்; ஒருவர் தற்கொலை செய்து கொண்டார் என்றும் கூறப்படுகிறது.*

கடந்த மாதத்தில் பிரிட்டிஷ் நெசவாலை தொழிலாளர்கள் 'காதல் புரியும் உரிமை' கோரி நடத்தப்பட்ட இந்த வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தரும் வகையில், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரம் 'ஸ்டர்லிங்' நன்கொடை தந்தனர்—என்றும் தெரிய வருகிறது.

இந்தோனேஷியாவிற்கு இந்தியா ஆதரவு!

ஜகார்தா, செப் 16— மேற்கு நியூ கினியா பிரச்சினை ஐ. நா. சபையின் அடுத்த கூட்டத்தில் விவாதத்திற்கு வரும் போது, இந்தோனேஷியா ஆதரிக்கும் வரை இந்தியத் தூதராலய அதிகாரி பத்திரிகை நிருபர்களிடம் கூறினதாகத் தெரிய வந்துள்ளது.

வாகியுள்ளன.

மற்ற இரு தீர்மானங்களில் ஒன்று, இந்தியத் தூதவர் தேசாய் உடனடியாகத் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்பதும், மற்றொன்று இலங்கையில் பிரஜா உரிமை கோரியுள்ள இந்தியர்களின் மனுக்களைப் பரிசீலிக்கும் நிர்வாகப் பிரிவையே வேலை செய்யாது நிறுத்தி வைப்பது என்பதுமாகும்.

இவ்விரு தீர்மானங்களையும் கண்டியைச் சேர்ந்த மக்கள்சபை உறுப்பினரான உனுப்பூவி என்பவர் கொண்டுவருகிறார் என்று தெரிகிறது.

கழகக் கூட்டங்கள்

★

வேலூர் (வ. ஆ.)

டவுன் ஹாலில்
19—9—54 மாலை 6 மணிக்கு
தலைவர் : முனுசாமி
பேசுவோர் :
முகவை ஆர் எஸ். பாண்டியன்
க. நெடுஞ்சோழன்

★

குன்னத்தூர்

தி.மு.க. 3-ம் ஆண்டுவிழா
சந்தைப்பேட்டைத் திடலில்
19—9—54 மாலை 6½ மணிக்கு
தலைவர் : கே. என். நடராசன்
பேசுவோர் :
தில்லை-வில்லாளன்
எம். எஸ். மணி

கூட்டம் முடிவுக்குப்பின் கோவை அரசு குழுவினரால் கலா நிகழ்ச்சி நடைபெறும்.

★

பூடியூர்

வடிவேலு ஏரியில்
19—9—54 மாலை 5 மணிக்கு
தலைவர் : வை. விழிநாதன்
பேசுவோர் :
மா. மாணிக்கம்

பெங்களூர் அக்கிபேட்டை தி.மு.க. உறுப்பினர்கட்கு

19—9—54 காலை 10 மணிக்கு பெங்களூர், அக்கிப்பேட்டை தி.மு.க. நிர்வாகக் குழு தேர்தல் பெலிமெட் ரோட் பாடசாலையில் நடைபெறும்.

பெங்களூர் மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகட்கு

19—9—54 மாலை 4½ மணிக்கு பெங்களூர் மாவட்ட தி. மு. கழக செயற் குழுக் கூட்டம், பிளாக்பள்ளி தி. மு கழக மனையில் நடைபெறும். அதுசமயம் பெங்களூர் மாவட்ட மாநாடு சம்பந்தமாக ஆலோசிக்கப்படும்.

சென்னை 6-வது வட்ட செ. கு. உறுப்பினர்கட்கு

19—9—54 மாலை 7 மணிக்கு சென்னை 6-வது வட்ட தி. மு கழக இல்லத்தில் தி மு. கழக செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

பம்பாய் தி. மு. கழக முதல் மாநாட்டு வரவேற்புக்குழுக் கூட்டம்

19—9—54 மாலை 5-30 மணியளவில், தாராவி குடியரசு நிலையத்தில், பம்பாய் தி. மு. கழக முதல் மாநாட்டு வரவேற்புக் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, மாநாட்டு ஆக்க வேலைகள் குறித்தும், மாநாட்டில் நடைபெறவிருக்கும் நடவடிக்கைகளைக் குறித்தும் கலந்தாலோசிக்கவேண்டியிருப்பதால் வ. கு. உறுப்பினர்களும், கிளைக் கழகப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை 24-வது வட்ட தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம்

19—9—54 மாலை 3 மணிக்கு சென்னை 24-வது வட்ட தி. மு கழகக் கட்டிடத்தில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் பிரிவினை வாரத்தையொட்டி உறுப்பினர்களுக்கு தேனீர் விருந்தளிக்கப்படும்.

தி மு.க. பொதுச்செயலாளர்

அண்ணாதுரை

சுற்றுப்பிரயாண நிகழ்ச்சி

✶

18—9—54 } நெல்லை
19—9—54 } மாநாடுகள்

வாண தொழிற்சாலையில் தீ விபத்து

4 பேர் மரணம்

சிவகாசி, செப். 16— சிவகாசியில் உள்ள வாண தொழிற்சாலையில் இன்று பிற்பகல் தீ விபத்து ஒன்று ஏற்பட்டதாகத் தெரிகிறது.

தீ விபத்து மிகவும் பயங்கரமாக இருந்ததென்றும், இதனால் 4 பேர் மரணம் அடைந்ததாகவும் 6 பேருக்கு பலமாயம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

உயர்நிலைப்பள்ளி கட்டிட திறப்பு விழா

சேலம் ஜில்லா, பவானிக்கு அடுத்த கொமாரபாளையம் பொதுமக்களாலும், நன்கொடையாளர்களாலும் சுமார் ஒரு லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட உயர்நிலைப் பள்ளி கட்டிடத்தை மைசூர் ராஜப் பிரமுகர் 23—9—54 காலை 10½ மணியளவில் திறந்துவைக்க இருக்கிறார். அன்று மாலை 4-30 மணிக்கு திருமதி கே. பி. சுந்தராம்பாள் இன்னிசைக் கச்சேரி நடைபெறும்.

தொழில்துறை நிதி கார்ப்பரேஷன், சென்ற ஆறு ஆண்டு காலத்தில், தனியார் நடத்தும் தொழில்களுக்கு மொத்தம் சுமார் 21 கோடி ரூபாய் வரை நிதி உதவி அளித்திருக்கிறது.

த.நா. தாழ்த்தப்பட்டோர் சம்மேளன ஊழியர் மாநாடு

19—9—54 காலை 9 மணிக்கு சென்னை, ராஜாஜி மண்டபத்தில், சென்னை ஜில்லா தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் ஆதரவில்; தமிழ் நாடு தாழ்த்தப்பட்டோர் சம்மேளன ஊழியர் மாநாடு கேப்டன் ஜி வெங்கடப்பா அவர்கள் தலைமையில் நடைபெறும்.

திரு. வி. க. நினைவு நாள்

18—9—54 மாலை 6½ மணிக்கு சென்னை, புரசை வெஸ்லி சாலை, அன்னதான சமாஜ மண்டபத்தில், சென்னைத் திருவள்ளுவர் கழகச் சார்பில் திரு. வி. க. நினைவு நாள் விழா டாக்டர் மா. இராசமாணிக்கனார் தலைமையில் நடைபெறும். தோழர் ச. கிருஷ்ணமூர்த்தி பேசுவார்.

நிதிக் காட்சி

19—9—54 காலை 9½ மணிக்கு சென்னை 19-வது வட்ட தி.மு.க. சார்பில் அண்ணா நூல் நிலைய நிதிக்காக பெரம்பூர் வாசல் லட்சுமி தியேட்டரில் 'வேலைக்காரி' திரைப்படம் காண்பிக்கப்படும். தோழர் என். எஸ். இராசேந்திரன் தலைமையில் தோழர் காஞ்சி கி. மனோகரன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

திராவிட ... தலைவர் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., ... அண்ணாதுரை எம். ஏ.

... மாநாடுகள் - செப். 18, 19-ல்